J. R. T. S.] GENERAL SERIES. [No. 4.

# POLICARP.

[Containing a brief account of the life, sufferings and death of the martyr Policarp.]

# பொலிகார்பு.

இவர் கிறிஸ்துமார்க்கத்தின் பொருட்டுப்பட்ட கொடிய மரணத்தைக் காட்டியது.

---

கிறிஸ்து நாதருடைய திரு அவதாரத்துக்கு நூற்றறுபது வருஷக்காலத்தின் பின் கிறிஸ்தவர்களில் அநேகர் தங்கள் மார்க்கத்திலே கொண்ட நம்பிக்கையான உறுதிப்பாட்டின் நிமித்தம் இராசாக்களால் அநேகவிதமான இடுக்கண்களை அனுபவித்தார்கள். எப்படியென்றால், சிலர் துட்டமிருகங்களுக்கு இரையிடப்பட்டார்கள், சிலர் நெருப்பில் இடப்பட்டார்கள், சிலர் ஒற்றைக் காலும் ஒற்றைக் கையுங் கம்பத்தோடே கட்டுண்டு தூக்கப்பட்டார்கள், சிலர் பட்டினியாய்ச் சாகுமளவும் வெயிலிலே வைக்கப்பட்டார்கள். இப்படி அநேகவிதமாக இடைஞ்சற்பட்ட காலத்திலே கிறிஸ்து பிறந்த யூதேயாவென்கிற தேசத்துக்குக் கிட்டுமானமான சுமேறுனாவென்னும் பட்டினத்தில் எண்

3d. Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000.
1841.

பத்தாறு வயதுமட்டாக இருந்து சனங்களுக்குச் சுவிசேஷத்தைப்போதித்த பொலிகார்பு என்ற ஒரு போதகர் இடும்பைப்பட்டார். எப்படியென்றால் அவ்வூராரிற்சிலர் அவர் மேலே எரிச்சலாகி அவரைக் கொல்ல வகை தேடினார்கள். அதற்கு அவர் சற்றும் பயப்படாமலிருக்க அவருடைய சினேகிதர்கள் அதை அறிந்து இப்படிப்பட்ட பொல்லாத ஊரிலே நீர் இருந்து நாள்விடுகிறது அரிது, மறு ஊருக்குப் போய் விடுமென்று மிகவும் வருடிச்சொன்னார்கள். இவர் அவர்களுடைய சொற்படியே அந்த நகரியைவிட்டுப் புறப்பட்டு அதற்குக் கிட்டின ஒரு ஊருக்குப்போனார்.

அவரைக் கொல்ல வகை தேடினவர்களும் விடாமற் பின்தொடர்ந்து போனபடியால் அந்த ஊரையும் விட்டு வேறொரு ஊருக்குப்போனார். அங்கும் அவர்கள் தொடர்ந்துபோய் அவர் இருந்த வீடுதிலயைச் சேர்ந்தும் அவரைக்காணுததினால் அந்த வீட்டிற் பணிவிடைகாரனைப் பிடித்துப் பொலிகார்பு என்பவர் இங்கே வந்தாரே, இப்பொழுது அவர் எங்கே? சொல்லென்று நெருக்கிடை பண்ணினார்கள். அவன் பயந்து அவர் இருந்த இடத்தைச் சொல்லிக்காட்டினான்.

அப்பொழுது அவர்கள் கள்ளனைப் பிடிக்கப் போகிறவர்களைப் போல ஆயுதங்களும் எடுத்துக் கொண்டு இராக்காலத்திலே பணிவிடைகாரனுடனே அவர் இருந்த வீட்டுக்குப்போய்த் தேடினார்கள். அந்நேரமே அவர் தப்பிவிட வழியிருந்தும் தப்பி விடாமற் கருத்தருடைய சித்தம்போலே ஆகக்கடவதென்று மேல் அறையை விட்டிறங்கி வெ

ளியேவந்து அவர்களுடனே பேசிக்கொண்டிருந்தார். அவர்களும் எங்கள் ஊருக்கு நீர் திரும்ப வரவேண்டும் என்றார்கள். அதற்கு அவருஞ் சம்மதித்துக்கொண்டு அவர்களுக்குப் போசனங் கொடுத்துத் தாம் கருத்தாவைப் பார்த்து வேண்டிக்கொள்ளவேண்டுமென்று சற்றுவேளை விடுதலைபெற்றுக்கொண்டு போய் மிகவும் மனம் பதித்து இரண்டு மூன்று நாழிகை அளவுக்குக் கருத்தாவை நோக்கி மன்றாடினார். அப்பொழுது அந்தச் சத்துருக்களிற் சிலர் அவருடைய தேவபத்தியைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். சிலர் இவ்வள்வு பத்தியுள்ள மனிதனைக் கொண்டுபோய்க் கொல்வதெப்படியென்று தக்கம் அடைந்தார்கள்.

அவர் வேண்டுதல்பண்ணி முடித்தவுடனே அவர்கள் அவரை ஒரு கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு தங்கள் ஊருக்குப் போகையில் அவருக்கு அறிமுகமான துரைமார் இரண்டுபேர் வழியில் எதிர்ப்பட்டு அவரை அழைத்துத் தங்களுடனே பண்டியின்மேல் இருத்திக்கொண்டு அவருடனே எங்கள் அன்புள்ளவரே, உமது சீவனைக் காப்பாற்ற வேண்டுமேயானால் இவர்கள் சொல்வதைக் கேட்டுக் கிறிஸ்துவை விட்டுவிடும் என்றார்கள். அவரோ அதற்கு மறுமொழி சொல்லாமலிருக்க அவர்கள் மிகவும் வருடிக் கேட்டதினால் அவர் நீங்கள் சொல்லுகிறபடி செய்யமாட்டேனென்று மறுத்தார். அப்பொழுது அவர்கள் கோபித்துக்கொண்டு அவரைப் பரிகாசம் பண்ணிப் பண்டியிலிருந்து தள்ளி விழுத்தினார்கள். அதினால் அவருடையகாலும் அடியுண்டு நோவுகொண்டது. அவரோ

அதைப் பாராமல், தம்மைப் பிடிக்க வந்தவர்களுடனே கூடிக்கொண்டு இடைவிடாமற் பராபரனைத் தியானித்துக் கொண்டுபோய் அவர்களுடைய ஊர் சேர்ந்தார்.

பின்பு அவர்கள் அவரைத் தங்கள் பட்டினத்தில் அதிகாரி முன்பாகக் கொண்டுபோய் விட்டார்கள். விட்டபொழுது அதிகாரியானவன் பொலிகார்பைப் பார்த்து நீ வந்துசேர்ந்ததே நல்லது. நீ இப்பொழுது கிறிஸ்துவை நிந்தித்துத் தள்ளுவாயேயானால் உன்னை விடுதலை பண்ணுவோம், அல்லாதிருக்கில் ஆக்கினைபண்ணிக் கொல்லுவோம் என்றான். அதைக் கேட்டமாத்திரத்திலே போதகரும் இந்த எண்பத்தாறு வயது அளவும் யாதொரு தீங்கும் இல்லாமற் காத்து வேண்டிய நன்மைகளைச் செய்துவந்த ஆண்டவராகிய கிறிஸ்துவை நிந்திப்பேனோ. இதுவரைக்கும் வழிபட்டதையுந் தொண்டு செய்ததையும் அவமாக்குவேனோ. மேற்பெறும்படி நம்பியிருக்கிற மோட்சத்தையும் போக்கடிப்பேனோ. நீங்கள் என்னசெய்தாலும் அவரை நிந்தித்துத் தள்ளிப் போட மாட்டேனென்றார்.

அவர் சொன்னதைக் கேட்டு அதிகாரியும் நீ அப்படிச் சொல்லாதை, கிறிஸ்துவைத் தள்ளிப்போடென்று மென்மேலுஞ் சொன்னான். ஆனாலும் அவர் ஒன்றையுங் கேளாமற் கிறிஸ்து மார்க்கம் எப்படிப்பட்டதென்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன் என்றார். அந்த வார்த்தையைக் கேளாமல் அதிகாரி மிகவுங் கோபங்கொண்டு, இப்பொழுதே உன்னைத் துட்ட மிருகங்களுக்கு இரை

யாகக் கொடுப்பேனென்று சொன்னான். அதற்கு
அவர் நல்லது. அப்படியே செய்யுமென்று பயப்
படாமற் சொன்னார். அதிகாரியானவன் இன்ன
மும் இவன் அடங்கவில்லை என்று அவரை நேரிட்
டுப் பார்த்து, உன் செருக்கெல்லாம் அடங்க அக்
கினிச் சூளையிலே இட்டு எரித்துப்போடுவேனெ
ன்று சொன்னான். அவரும் என்னை அக்கினியிலே
போட்டு வைத்தாலும் என்ன? அது சற்றுவேளையி
லே தணியும். கிறிஸ்துவைக் கைவிடாமல் இருந்
தேனாகில் என்னை நித்திய நரக நெருப்பிலே நின்
று நீக்கி மோட்சவாழ்விலே சேர்த்துக்கொள்வார்.
எரித்துப்போடுங்கள் என்று தாமாகப் போனார்.

அவர்களும் இவன் ஒன்றுக்கும் பயப்படானெ
ன்று அறிந்தும் எரித்துப்போடவேண்டுமென்று
தீர்த்துக்கொண்டு ஒரு கம்பம் நாட்டி அதினுட
னே இவரை அடுத்துக் கட்டிச் சுற்றவர விறகுக
ளை அடுக்கிப் போட்டுத் தகனம்பண்ணத் தொட
ங்கினார்கள்.

அந்தப் போதகரும் இவர்களுடனே இந்த நெ
ருப்பின் அகோரத்தைத் தாங்கும்படி கர்த்தர் எ
னக்குப் பெலனைக் கொடுப்பார், ஆம். அதற்குச் ச
தேகம் இல்லை தாமதியாமல் என்னில் நெருப்பை
வையுங்கள் என்று சொன்னார். அவர்களுங் கம்ப
த்தோடு சேர்த்துக் கட்டின பொழுது போதகர்
கர்த்தாவே, நித்திய ஆசீர்வாதமுள்ளவரான இயே
சுக்கிறிஸ்துவின் பிதாவே, மோட்சத்தில் இருந்து
வாழுகின்ற தேவ சேனைகளுக்கும் நீதிமான்களுக்
கும் நாயகமே, சகல புவனத்தையும் ஆளுகிற அதி
பதியே இத்தருணத்திலே தேவரீர் எளியேனுடை

ய ஆத்துமாவை ஏற்றுக்கொள்ளச் சித்தமானது பெரிய இரக்கம். ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் நிமித்தந் தேவரீர் கொண்ட இந்த இரக்கத்தினாலே தேவரீருடைய திரு நாமம் விளங்கி மகிமைப்படுமே. ஆதலாற் பிதாக் குமாரன் பரிசுத்தரூபியாகிய திரியேகரே தேவரீருக்கு இப்பொழுதும் எப்பொழுதும் புகழ்ச்சி உண்டாவதாக, ஆமன். என்று சொன்னார்.

அப்படியே அவர் சொல்லி முடித்தவுடனே அந்தப் பொல்லாதவர்கள் நெருப்பையுங் கொழுத்தி விட்டார்கள். அது அதிக வேகங்கொண்டு கணகணென்று பற்றி எரிந்தது. அதற்கு நடுவே அவர்நட்ட கட்டைக்குச் சரியாக அசையாமல் நின்றார். அதை அந்தப் பொல்லாதவர்களும் அவர்களோடே கூட நின்ற மற்றுஞ் சனங்களுங்கண்டு ஒரு சேவகனைக் கூப்பிட்டு இவனை ஈட்டியினாலே விலாவிலே குத்திக்கொன்றுபோடென்றுசொல்ல அவனும் அப்படியே அவருடைய விலாவிலே குத்தினான். அப்பொழுது அந்த உத்தமமானபோதகர் களைத்து மூர்ச்சையற்றிறந்து பரலோகஞ் சேர்ந்தார்.

இந்தக் காரியம் எல்லாம் அவருடைய சினேகிதர் கண்டு மிகவுந் துக்கம் அடைந்து அவரைக் கொலைபண்ணின பொல்லாதவர்களைப் பார்த்துப் போதகருடைய சரீரத்தைத் தாங்கள் கொண்டு போய் அடக்கம் பண்ணத் தரச்சொல்லிக் கேட்டாலும் அவர்களுக்குக் கொடாமல் அவர்கள் முகதாவிலேதானே நெருப்பிலேயிட்டுத் தகனம் பண்ணிப் போட்டுத் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போ

னார்கள். அதின்பின்பு அவருடைய சிநேகிதர்கள் அவருடைய சரீரத்தின் எலும்புகளையுஞ் சாம்பலையுங் கூட்டியள்ளித் தங்களுக்கேற்க ஒரிடத்திலே சேமமாய் அடக்கம் பண்ணிப்போட்டுப் போனார்கள்.

சனங்களே, கிறிஸ்துநாதரை மறுதலிக்கவும் உலகத்தார் நடக்கிற விதமாய் நடக்கவும் பண்ணும் படிக்குப் பொலிகார்பைப் பிறவூரவர்கள் மாத்திரமல்ல உள்ளூரவர்களும் யோசனைபண்ணிப் பலபல கொடுமைகளைச் செய்துவந்தும் அவர் தவறாமல் இம்மைக்கடுத்த நன்மையுஞ் சவுக்கியமும் பெரும்பேறல்லவென்று வெறுத்துப் பாவிகளுக்காகப் பாடுபட்டுத் தம்மைப் பலியாக்கிப் பாவ நிவிர்த்தி பண்ணின இயேசுக் கிறிஸ்துவைத் தள்ளினால் அது நன்றிகேடென்றும் மறுமைப் பேறாகிய மோட்சத்தை இழந்து நரகத்துக்குப் போகவேண்டியதாய் வருமென்றும் அந்தப் பத்தியுள்ளவர் கண்டு இரட்சகரை விடாமற் பிடித்து விசுவாசித்து, அது நிமித்தம் பொல்லாதவர்களாலே பிராண சேதம் அடைந்தார். ஆகையால் இன்று முதல் நீங்களுஞ் சரீர நன்மையை விரும்பாமல் ஆத்தும நன்மையையே நாட்டமாய் விரும்பி இயேசுக்கிறிஸ்துவை எற்று விசுவாசித்து அவர்மூலமாய்ப் பராபரனை நோக்கிப் பாவப் பொறுத்தலைக் கேட்டுமன்றாடி நித்திய சுகானந்தமோட்சத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவீர்களாக.

## கிறிஸ்துவின் நிமித்தம் உபத்திரப்படுவதில் சந்தோஷிப்பதைக்குறித்து.

வாழ்க சிலுவையே வாழ்க
பாரமற்ற பாரமே!
நீ வந்தால் இணக்கமாக
உன்னை ஏற்றுக்கொள்வேனே
கர்த்தராலே
நீ அனுப்பப்பட்டது.

இந்த நிந்தை லச்சையல்ல,
இது வெட்கம் அல்லவே,
சோதனை பொல்லாங்குக்கல்ல,
நீதிக்காக வந்ததே
இயேசுநாதர்
நிந்தைப் ப[illegible]பட்டாரே.

சிலுவையின் கீழ்த் தவிக்கும்
தம்முடையவர்களை
யேசுநாதர் ஆதரிக்கும்
அன்பிரக்கம் எத்தனை!
அவ்வுபகாரம்
நீதிமானுக்கின்பமாம்.

கர்த்தரைப் பின்செல்வோமாக
சிலுவையின் தோழரே,
கர்த்தரை மகிழ்ச்சியாக
தோத்திரிப்போமாகவே.
கர்த்தர் தாமே
அன்புடன் மரித்தாரே.

லோகம் நன்மைமா இகழ்ச்சி
பண்ணிச் சங்கரிக்கவே,
கர்த்தராலே மா மகிழ்ச்சி
ஆறுதல் கிடைக்குமே.
அதற்காக
நாயகனுக்கே தோத்திரம்.

---

முற்றிற்று.